**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**S.C.No.203/2024**

**வழக்கு சாட்சி P.W.13**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடாசலபதி | தொழில் | : காவல் ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : வரதராஜன் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : திண்டுக்கல் | வயது | : சுமார் 54 |
| தாலுக்கா | : திண்டுக்கல் | நாள் | : 06.07.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1, 2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் நான் இறுதி கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் என்றால் ? சரிதான். இவ்வழக்கில் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தியுள்ள எந்த சாட்சிகளிடமும் நான் யாரிடமும் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் ? சரியல்ல. மருத்துவரிடமும், காவல் உதவி ஆய்வாளரரிடமும் புலன் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். அ.சா.9 மருத்துவரிடம் விசாரணை மேற்கொண்ட போது புகார்தாரர் குடிபோதையில் இருந்ததாக என்னிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளாரா என்றால் ? இல்லை. அ.சா.9 என்பவர் இந்நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் புகார்தாரர் குடிபோதையில் இருந்ததாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ள நிலையில், நான் ஏதோ ஒரு காரணத்திற்காக வேண்டி அவ்வாறு இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. புகார்தாரர் குடிபோதையில் இருந்த போது தள்ளாடி கூர்மையான பொருளின் மீது விழுந்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் ? சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் ? சரியல்ல. காவல் உதவி ஆய்வாளர் கொடுத்த தன்மைபடி தான் இவ்வழக்கில்

நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? நானும், சாட்சிகளிடம் புலன் விசாரணை மேற்கொண்டேன். காவல் உதவி ஆய்வாளரிடம் சொன்னதை போலவே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலங்கள் எதையும் பதிவு செய்யவில்லை. சம்பவ இடத்தை நான் பார்வையிட்டேன். காவல் உதவி ஆய்வாளர் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததில் கண்டுள்ளவாறு சம்பவ இடம் இருந்ததாலும், நான் தனியாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. முதற்கட்ட விசாரணை காவல் உதவி ஆய்வாளர் முடித்ததால் இறுதி புலன் விசாரணையில் எந்த வித மாறுபாடும் இல்லாத காரணத்தினால் வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். அ.சா.9 மருத்துவ சாட்சியத்திற்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்றதாக முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சிகள் இந்நீதிமன்றத்தில் அளித்த சாட்சியங்கள் முற்றிலும் மாறுபட்டுள்ளது என்றால் ? அது தவறு. தவறானத தகவலை தாங்கிய இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.06 18:54:11 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.203/2024**
**வழக்கு சாட்சி P.W.12**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : S.சவடமுத்து | தொழில் | : காவல் உதவி ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : சவடையன் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : J.புதுக்கோட்டை | வயது | : சுமார் 38 |
| தாலுக்கா | : ஆத்தூர் | நாள் | : 06.07.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1, 2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்றால் ? முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரி. இந்த வழக்கில் புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சாட்சிகளிடம் வாக்மூலம் பதிவு செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்து, சான்று பொருள் கைப்பற்றி, ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தது முதல் அனைத்தும் நான் தான் தயார் செய்தேன் என்றால் ? சரிதான். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.13 சாட்சிகளிடம் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் ? நான் விசாரணை மேற்கொண்டது சரியாக இருந்த காரணத்தினால் கூடுதலாக சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கின் முழுவிபரங்களும் எனக்கு தான் நன்றாக தெரியும் என்றால் ? சரிதான். சம்பவ இடம் எந்த இடம் என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ? நாகப்பன்பட்டி, A.D.காலனி, முத்துலெட்சுமி வீட்டு சந்து மற்றும் சந்தோடு சேர்ந்த மண் பாதை. நான் தயார் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் நாகப்பன்பட்டி, A.D.காலனி, மண்பாதையில் சம்பவம் நடைபெற்றதாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ? சரிதான். மாதிரி வரைபடத்தில் முத்துலெட்சுமி

வீட்டு சந்து என்று குறிப்பிட்டு எதையும் நான் காட்டவில்லை என்றால் ? சரிதான். பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ளேன். நான் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாத காரணத்தினால் பார்வை மகஜரில் ஒரு இடமும், மாதிரி வரைபடத்தில் ஒரு இடமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. அ.சா.1 என்பவரிடம் எந்த தேதியில் எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் ? கடந்த 04.06.2022ம் தேதி இரவு 22.00 மணிக்கு ஒட்டன்சத்திரம் சி.எப் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த பெருமாள் என்பவரிடம் 23.30 மணிக்கு வாக்குமூலம் பெற்று 05.06.2022ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு காவல் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்தேன். அ.சா.1 என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றது 04.06.2022ம் தேதி என்றால் ? சரிதான். புகார் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ள செல்வக்குமார் என்பவரிடம் 05.06.2022ம் தேதி தான் நான் சாட்சி கையொப்பம் வாங்கியுள்ளேன் என்றால் ? 05.06.2022ம் தேதி தான் சாட்சி கையொப்பம் வாங்கியுள்ளேன். அ.சா.1 என்பவரிடம் மருத்துவமனையில் வைத்து நான் புகார் வாக்குமூலத்தை பெறவில்லை என்றாலும், பின்னிட்டு சௌகரித்திற்கு ஏற்ப அ.சா.1 என்பவரிடம் மறுநாள் 05.06.2022ம் தேதி தான் பெற்றுள்ளேன் என்றால்? சரியல்ல. அ.சா.1 என்பவரிடம் நான் புகார் வாக்குமூலம் பெற்ற போது அவர் மது போதையில் இருந்ததாக சொன்னால் அது சரியா, தவறா என்றால் ? சரியல்ல. அ.சா.9 மருத்துவர் அளித்த சாட்சியத்தில் புகார்தாரரான பெருமாள் என்பவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்த போது மதுபோதையில் இருந்ததாக சாட்சியம் முன்னிலைப்படுத்தியுள்ளார் என்றால் அது தவறு என்றால் ? சரிதான். அ.சா.9 அளித்த சாட்சியத்தில் புகார்தாரரான பெருமாள் மதுபோதையில் இருந்ததாக சொல்லியுள்ளது சரி என்றாலும், நான் சொல்வது தவறு என்றாலும் ? சரியல்ல. அ.சா.1 சம்பவ தினத்தன்று தவறி மதுபோதையில் கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயம் தான் அவருக்கு ஏற்பட்ட காயம் என்றால் ? சரியல்ல. எதிரிகள்

உறவினர்கள் என்பதாலும், முன்பகையின் காரணமாக கொடுத்த புகாரினை சரியாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல. சான்று பொருட்களை கைப்பற்றியபோது யார் யார் முன்னிலையில் சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்றால் ? சுப்பிரமணி, பழனிச்சாமி. சாட்சியான அ.சா.8 பழனிச்சாமி நான் வெரியப்பூர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டுஇருந்த போது என்னுடன் சுப்பிரமணி என்பவரும் நின்று கொண்டு இருந்தார் என்றும் அப்பிளிக்கைபோலீசார் வந்ததாகவும், ரவிக்குமார் மற்றும் மணியையும் குத்திய கத்தி எங்கே என்று கேட்டதாகவும், நானும், சுப்பிரமணியும் பஸ்டாப்பில் நின்று கொண்டு இருந்ததாகவும், எங்களிடம் கையெழுத்து கேட்டதாகவும், நாங்கள் கையெழுத்து போட்டு கொடுத்தோம் என்று சொல்லியிருந்தால் ? அது தவறு. அ.சா.11 என்பவரும் அதே போல் சொல்லியிருந்தால் அது தவறு. அ.சா.8 மற்றும் அ.சா.11 ஆகியோர்கள் என்னிடம் உண்மையை சொல்லியிருந்த போதும் சம்பவ இடத்திற்கு சென்று முறையாக சாட்சிகள் விசாரணை மேற்கொள்ளாமல், சான்று பொருட்களை கைப்பற்றாமல் ஒப்புதல் வாக்குமூலம் பெறாமல் உரிய நேரத்தில் பதிவு செய்யாமல் வழக்கிற்காக வேண்டி காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு, சம்பவ இடத்தில் தயார் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. அத்தாட்சி, கைப்பற்றுதல் மகஜரில் எந்த இடத்தில் வைத்து கைப்பற்றியதாக சொல்லியுள்ளேன் என்றால் ? நாகப்பன்பட்டி, A.D காலனி முத்தாலம்மன் கோவில் அருகில் உள்ள முட்புதரில் இருந்து கைப்பற்றப்பட்டது. அ.சா.8 காளியம்மன் கோவில் அருகில் உள்ள முட்புதரில் கத்தியை போலீசார் கைப்பற்றியதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ? சரிதான். அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகிய இருவரும் மைனர் சாட்சிகள் என்றால் ? சரிதான். அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்களிடம் வாக்குமூலம் வாங்கும் போது இரண்டு சாட்சிகளும் மைனராக உள்ள நிலையில் மைனர் சாட்சிகள் என்று எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? வயதை குறிப்பிடும்

போது சாட்சிகளுக்கு 17/2022 என்று வயதை குறிப்பிட்டுள்ளேன். இளவர் சாட்சிகளை விசாரிக்கும் போது அவரது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் வைத்து கொண்டு தான் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றால் ? சரிதான். பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் முன்பு தான் இளவர் சாட்சிகளை விசாரித்ததாக வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் ? சரிதான். தகப்பனார் மருத்துவமனையில் இருந்ததால் குறிப்பிடவில்லை. அ.சா.3 கண்ணம்மாள் என்பவர் 10 நபர்களும் சேர்ந்து எனது மகனை பிடித்துக் கொண்ட போது எனது மகனை குத்திவிட்டார்கள் என்று இந்நீதிமன்றத்தில் சாட்சியம் முன்னிலைப்படுத்தியிருந்தால் ? அது தவறு. நான் சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், சாட்சிகளிடம் புலன் விசாரணை மேற்கொள்ள வில்லை என்றாலும், மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றாலும், சான்று பொருட்கள் கைப்பற்றவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள காவல் உதவி ஆய்வாளராகிய நானே இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டதால் நான் மேற்கொண்ட புலன் விசாரணை சரியான புலன் விசாரணை அல்ல என்றாலும் ? சரியல்ல. தவறான தகவலை தாங்கிய வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.06 18:54:19 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்